*58*

# வெற்றிகரமான வியாபாரியின் தவறுகள்[1]

## லூக். 12:13-21, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*வாழ்வு என்பது, விலைமதிப்பற்ற பொருட்கள் சற்றும் ஏற்பில்லாத வகையில் மிகவும் குறைவான விலை குறிப்பிட்ட துண்டுச் சீட்டுகளுடன் இருக்கையில், விலைமதிப்பே இல்லாத பொருட்கள் நகைப்பிற்கு இடமான வகையில் மிக உயர்ந்த விலை குறிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள காட்சிப் பலகணியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.[2] இன்றைய நாட்களில், உண்மை யிலேயே மதிப்புமிக்கவை முக்கியமற்றவைகளாகக் காணப்படுகின்றன. அதே வேளையில் விலைமலிவான மற்றும் போலிப் பகட்டானவைகள் விலைமதிப்பற்றவைகளாகத் தோன்றுகின்றன.*

*பொருள்களை வலியுறுத்தும் ஒரு உலகத்தில் நாம் வாழ்கின்றோம்.[3] நிதி நிலைரீதியான வெற்றி, பொருளாதாரத்தின் ஆரோக்கிய நிலை மற்றும் உடைமைகளைச் சேர்த்துக் குவித்தல் என்பவற்றினால் பலர் ஆட்டுவிக்கப் பட்டுக் கொண்டு இருக்கின்றனர். இந்த வலியுறுத்தத்தினால் சூழப் பட்டுள்ள நாம், உண்மையான மதிப்புகளின்மீதான கண்ணோக்கை சுலபத்தில் இழந்துவிடக்கூடும். நமது வேத பாடப்பகுதியான லூக்கா 12:13-21ல் இதுவே விஷயமாக உள்ளது.*

*ஒருநாள், இயேசு போதித்துக் கொண்டிருக்கையில், ஜனக்கூட்டத்தி லிருந்து ஒருவர் அவரை இடைமறித்தார்: "போதகரே, ஆஸ்தியைப் பாகம்பிரித்து என் வீதத்தை எனக்குத் தரும்படி என் சகோதரனுக்குக் கட்டளையிட வேண்டும்" (வ. 13). இந்த மனிதரின் சிந்தையானது பிரசங்கத்தின்மீது இருந்ததே இல்லை. கிறிஸ்துவின் வார்த்தைகளை விருந்தாக உண்பதற்குப் பதிலாக, இவரது மனதில் குடும்பத்தில் இருந்த ஒரு சிறு சண்டை இடம் பிடித்திருந்தது. ஒவ்வொரு பிரசங்கியாரும் இது போன்ற அனுபவத்தைப் பெற்றிருக்கின்றார். அவர் மக்களைக் காலத்திற்கும் நித்தியத்திற்கும் தயார் செய்விப்பதற்காக ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முயற்சி செய்கின்றார். பின்பு ஆராதனை ஊழியத்தைத்தொடர்ந்து, யாரேனும் ஒருவர், தாம் அந்தப் பிரசங்கத்தில் ஒன்றையும் கேட்டிருக்க வில்லை என்று சுட்டிக் காண்பிக்கும், முற்றிலும் பொருத்தமேயில்லாத விளக்கம் ஒன்றை ஏற்படுத்துகின்றார்.[4]*

*கர்த்தருடைய போதனையானது இம்மனிதரின் இருதயத்தில் ஊடுருவத் தவறிற்று என்பதற்காகக் கர்த்தர் துக்கம் அடைந்தார். அவர்,*

*"மனுஷனே, என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாக வும் வைத்தவன் யார்[5]?" என்று கேட்டார் (வ. 14).[6] அவர் இம்மனிதரின் இருதயத்திற்குள் உற்றுநோக்கி, இவரது பிரச்சனையைக் கண்டுபிடித்தார். அவர் இவரிடத்தில், "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவ னுக்கு ஜீவன் அல்ல" என்று கூறினார் (வ. 15). பின்பு அவர் பின்வரும் உவமையைக் கூறினார்:*

> *ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: -"நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே. நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை[7] இடித்து பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு' என்று என் ஆத்துமாவோடே சொல்லு வேன்'' என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி: ''மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?'' என்றார்[8] (வ. 16ஆ - 20).*

*அவர், "தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங் களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்"[9] என்று கூறித் தமது பாடத்தை முடித்தார் (வ. 21).*

*இந்த உவமையில் வரும் மனிதர் வெற்றிகரமானவர் என்று உலகத் தாரால் கருதப்படுவார். மூலவசனமானது, இவர் ஒரு விவசாயியாகவும் வர்த்தகராகவும் இருந்தார் என்றும் இவ்விரு முயற்சிகளிலும் இவர் வளம் அடைந்திருந்தார் என்றும் சுட்டிக்காண்பிக்கிறது. இன்றைய நாட்களில் நாம் இவரை ''வெற்றிகரமான வியாபாரி'' என்று பெயரிடுவோம். இந்த வியாபாரி பணம் சம்பாதிக்கும் வரம் பெற்றிருந்தார் என்ற உண்மையில் களங்கம் எதுவும் இருந்ததில்லை என்று சொல்ல நான் துரிதப்படுகின்றேன். "பணம்தான் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்று சிலவேளைகளில் கூறப்படுவதுண்டு, ஆனால் பவுல், ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது" என்று கூறினார் (1 தீமோ. 6:10அ). பணம் நன்மைக்காகச் செலவிடப்பட முடியும். அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்ற பெயர் கொண்டிருந்த ஒருவர், "இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானு மாயிருந்தார்" (மத். 27:57). பணம் அல்ல பிரச்சனை, ஆனால் அதைக் குறித்த ஒருவருடைய நடக்கையே பிரச்சனையாக உள்ளது. ஜார்ஜ் W. பெய்லி அவர்கள் இதைப் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''சொத்துக்களைக் கொண்டிருத்தல் என்பவை உண்மையில் நம்மைப் புண்படுத்துவதில்லை, ஆனால் சொத்துக்கள் பற்றிய நிலைப்பாடுதான் நம்மைப் புண் படுத்துகிறது."[10]*

*இந்தச் செல்வந்தர் இறந்தபோது, இவரது சவஅடக்கத்தில் பிரசங்கித்தவர், தாம் குறிப்பிடக்கூடிய நல்ல பண்புகளைக் கண்டறிவதில் பிரச்சனை எதையும் கொண்டிருக்க மாட்டார். இம்மனிதர் நேர்மையான முறையில் தமது செல்வங்களைப் பெற்றிருந்தார் என்பது உறுதி. இவர் புரிந்து கொள்ளப்படுவதற்கு அப்பாற்பட்ட அல்லது கேள்விக்குரிய வியாபார நடவடிக்கைகளைக் கொண்டிருந்தார் என்ற சுட்டிக்காண்பித்தல் எதுவும் இல்லை; கெட்ட நடத்தையைப் பற்றி எந்த அறிகுறியும் இல்லை; தெளிவாக இவர் ஒரு நல்ல, ஒழுக்கம் வாய்ந்த நபராக இருந்தார் என்பது தெளிவு. இருந்தபோதிலும், இந்த வெற்றிகரமான வியாபாரி தமது ஆத்துமாவை அழிவுக்குட்படுத்தும் தீவிரமான தவறுகள் பலவற்றைச் செய்திருந்தார்.*

## *தவறு #1 -*
## *இவர் மதிப்பீடுகளின் கருத்துணர்வில் குறைவுபட்டிருந்தார்*

*முதலாமிடத்தில், இவர் மதிப்பீடுகளின் கருத்துணர்வில் குறைவு பட்டிருந்தார். இவர் பிழைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவனுடைய இயல்பான சட்டத்தைப் பின்பற்றியிருந்தார், ஆனால் அவர் ஜீவனை ஏற்படுத்துவதற்குத் தேவனுடைய ஆவிக்குரிய சட்டத்தைப் புறக்கணித் திருந்தார்.*

*ஒருவரின் வாழ்வில் அவரது இலக்கு, நோக்கம் மற்றும் தூண்டுகிற கொள்கைகள் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது வேறெதுவும் இருப்பதில்லை. நான் தவறாகக் கூறுபவனாயிருக்கலாம், ஆனால் அது எனது வாழ்வை ஆளும் கொள்கையாக இருந்திருந்தால் இன்று நான் ஒரு செல்வந்தனாக இருந்திருக்கக் கூடும். பணத்தைச் சேர்த்துக் குவித்து வைத்தல் பற்றிய புத்தகங்கள், மனமானது அந்தப் பேராவலினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும் என்று பொதுவாக வலியுறுத்துகின்றன. இப்படிப்பட்ட ஒரு இலக்கின் அபாயங்களைப் பற்றிப் பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1 தீமோ. 6:9, 10).*

*இந்த செல்வந்தர் தமது செல்வங்கள் பற்றிய நினைவுகளுக்குத் தமது மனதில் முதலிடம் கொடுத்திருந்தார். வேத வசனப் பகுதி சுட்டிக் காண்பிக்கிறபடி, இவர் தேவனைப் பற்றியோ, தமது சக மனிதரைப் பற்றியோ அல்லது இவ்விருவருக்குமான தமது பொறுப்பைப் பற்றியோ*

ஒருக்காலும் நினைத்துப் பார்த்ததில்லை. கண்ணுக்கு முன்பாக வைக்கப் பட்ட ஒரு சிறு நாணயம், வானுயர்ந்த ஒரு மலையையும் மறைத்துவிடக் கூடும். அதுபோலவே, செல்வங்களைக் குறித்து சிந்தையில் முதலிடம் கொண்டுள்ள தன்மையானது, ஒரு நபர் தம் வாழ்வில் உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்ததைத் தவறவிடக் காரணமாயிருக்கக் கூடும்.[11]

"மேலும் காணப்படுகிறவைகளையல்ல,[12] காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... காணப்படுகிறவைகள்[13] அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்'' என்று பவுல் எழுதினார் (2 கொரி. 4:17, 18). இயேசு, "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" என்று கேட்டார் (மத். 16:26). அவர் நம் ஒவ்வொருவரை யும், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும்" தேடும்படி உற்சாகப்படுத்தினார் (மத். 6:33). ஒரு மனிதருடைய செல்வங்கள் எங்கே இருக்கின்றன என்பதைக் கண்ணோக்கி, அவரது இருதயம் எங்கே இருக்கிறது என்று நாம் கூறமுடியும் என்று அவர் உரைத்தார் (மத். 6:21).

செல்வந்தரான இம்மனிதர், அநித்தியமானவைகளின்மீது தமது நம்பிக்கையை வைத்தார். இவரிடத்தில் தேவன், ''உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?" என்று கூறினார் (லூக். 12:20). மக்கள் செல்வங்களைச் சேர்த்துக் குவிப்பதில் தங்கள் வாழ்வைச் செலவிடுகின்றார்கள் - பின்பு கடைசியில், அவர்கள் எதைக் கொண்டுள்ளார் கள்? ஒன்றுமில்லை.[14] சங்கீதக்காரரின் கூற்றுப்படி, ஒரு செல்வந்தர் இறக்கும்போது, "ஒன்றும் கொண்டுபோவதில்லை" (சங். 49:16, 17). யோபு, "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்" என்று கூறினார் (யோபு 1:21அ). பவுல், "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை" என்று எழுதினார் (1 தீமோ. 6:7).[15] கல்லறையில் பிழைத்திராத எதுவும் நமது முன்னுரிமைப் பட்டியலில் உயர்ந்த இடத்தில் இருக்கக் கூடாது. இயேசு பின்வருமாறு வற்புறுத்தினார்:

> பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத். 6:19, 20).

செல்வந்தரான கால்நடை உரிமையாளர் ஒருவர், உயர்ந்த மலையில் இருந்த தனது அகன்று பரந்த கால்நடை வளர்ப்புப் பண்ணைக்கு ஒரு பிரசங்கியாரைக் கூட்டி கொண்டுபோய், கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் மற்றும் தெற்கிலும் சுட்டிக்காண்பித்தார். "உங்களால் பார்க்கக்

*கூடிய தொலைவு வரைக்கும் உள்ள எல்லாம் எனக்குச் சொந்தமானது" என்று கூறினார். அந்தப் பிரசங்கியார், வானத்தை நோக்கிச் சுட்டிக் காண்பித்து, "அதில் உங்களுக்குச் சொந்தமானது எவ்வளவு?" என்று கேட்டார். உண்மையிலேயே முக்கியமானதாக உள்ளதைப் பற்றி நாம் கற்றுக்கொண்டு அதை நமது வாழ்வில் முதலிடத்தில் வைப்பது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.*

## *தவறு #2 -*
## *இவர் சுயநலமுள்ளவராக இருந்தார்*

*இரண்டாவது, வெற்றிகரமான இந்த வியாபாரி சுயநலமுள்ளவராக இருந்தார். கிரேக்க மொழியில், தன்மைப் பெயர்ச் சொற்கள் ("நான்" மற்றும் "எனது" என்பவை) இவரது வரலாற்றைக் கூறும் இம்மூன்று வசனங்களில் பன்னிரெண்டு முறைகள் வருகின்றன.*

*செல்வத்திற்காக உழைத்தல் என்பது ஒருவரை, தம்மைப் பற்றி மட்டுமே நினைத்து பிறரைப் பற்றிய பார்வையை இழந்துபோகச் செய்வதாக இருக்கும். கிறிஸ்தவ வியாபாரி ஒருவர் ஒருமுறை என்னிடம், தாம் அதைக் கொண்டு என்ன செய்வது என்று நிச்சயமற்ற அளவுக்குப் பணம் ஈட்டுவதாகக் கூறினார். "நான் அதை மீண்டுமாக முதலீடு செய்கின்றேன்" என்று அவர் கூறினார். இதற்குச் சற்றுப்பின்பு, அவர் உறுப்பினராக இருந்த சபையானது மதிப்பு வாய்ந்த ஒரு காரணத்திற்குக் கொடுக்கும்படி அறைகூவல் விட்டது. அந்த சபையில் உள்ள பெரும்பான்மையான விதவைகள் கொடுத்ததைக் காட்டிலும் குறை வாகவே அவர் கொடுத்தார்! ஜன்னல் கண்ணாடிக்கும் முகம்பார்க்கும் கண்ணாடிக்கும் இடையில், கண்ணாடியின் பின்புறம் உள்ள வெள்ளிப் பூச்சு ஒன்றுதான் வேறுபாடாக உள்ளது.[16] நீங்கள் தெளிவான கண்ணாடி வழியை கண்ணோக்கும்போது, உங்களால் மற்றவர்களைக் காணமுடியும், ஆனால் வெள்ளிப்பூச்சுப் பூசப்பட்ட கண்ணாடியில் கண்ணோக்கும்போது உங்களால் உங்களை மட்டுமே காணமுடியும்.[17]*

*செல்வந்தரான இம்மனிதர் தமது கூடுதலான தானியங்களைச் சேர்த்து வைக்கத் தாம் ஏற்கனவே "களஞ்சியங்கள்" கொண்டிருந்ததை உணர்ந் தறியத் தவறினார்: துன்புற்றுக் கொண்டிருந்தவர்களின் கரங்கள், பசியா யிருந்தவர்களின் வாய்கள், குளிராயிருந்தவர்களின் உடல்கள், விதவைகள் மற்றும் அநாதைகளின் வாழ்வுகள்[18] (லூக். 12:33; எபே. 4:28 ஆகியவற்றைக் காணவும்).*

*பிறருக்குச் சேவை செய்வதற்காகவே தேவன் நம்மை இந்தப் பூமியில் வைத்துள்ளார். "ஆகையால், நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா. 6:10). ஊறுகாய்களை விற்று அதன்மூலமாகப் பெரும்பொருளீட்டிய ஜான் H. ஹெய்ன்ஸ் என்பவர்[19] பின்வரும் கொள்கையைக் கொண்டிருந்தார்: "முதலாவது தேவன், இரண்டாவது மற்றவர்கள், மூன்றாவது ஊறுகாய்கள்." முதிர்வயதுடைய ஒரு மனிதர்*

தமது மகனிடத்தில் பின்வருமாறு கூறினார்: "நியாயத்தீர்ப்பில் தேவன் உன்னிடம் உனது பணத்தைப் பற்றி மூன்று கேள்விகளைக் கேட்பார்: (1) உன்னால் முடிந்த அளவு சம்பாதித்தாயா? (2) அதை நீ நேர்மையாகச் சம்பாதித்தாயா? (3) அதை நீ பிறருக்குப் பயன்படுத்தினாயா?" செல்வம் என்பது மகிழ்வுடன் அனுபவிப்பதற்காக மாத்திரமல்ல, அது - பிறருக்கு உதவுதல் என்ற - வேலைக்கும் அமர்த்தப்பட வேண்டும்.

செல்வந்தரான இம்மனிதர் தமது செல்வங்கள் யாவும் தம்முடையவை என்றும், தாம் விரும்பியபடி அதைக் கொண்டு செய்யலாம் என்றும் நினைத்தார். தாம் அவற்றிற்கு ஒரு உக்கிராணக்காரராக மட்டுமே இருந்ததை அவர் உணர்ந்தறியத் தவறினார். சட்டப்பூர்வமான கருத்தின் படி, நாம் பொருட்களை உடைமையாகக் கொண்டுள்ளோம்; ஆனால் வேதாகமரீதியான கருத்தின்படி, நாம் அவைகள் வருகிற ஆதாரமூலமான கர்த்தருக்காக அவற்றைப் பராமரிக்க மட்டுமே செய்கின்றோம்.[20] செல்வந்தரான இந்த மனிதரின் தவறானது, "என்னிடம் உள்ளது என்னுடையது, அதை என்ன செய்யவேண்டும் என்று எவரொருவரும் எனக்குக் கூறமுடியாது!" என்று கூவுகின்றவர்களால் இன்றும் தொடரப்படுகிறது.

நம்மிடத்திலிருந்து சுயநலத்தை நீக்கிப்போடப் போராடுதல் என்பது நாம் ஒவ்வொருவரும் எதிர்கொள்ளுகின்ற ஆவிக்குரிய மாபெரும் போராட்டங்களில் ஒன்றாக உள்ளது (பிலி. 2:3ஐக் காணவும்). "சுயத்தை மையங்கொண்ட ஒரு பெண்மணியைப் பற்றிப் பின்வருமாறு கூறப் படுகிறது, 'எடித் ஒரு சிறு உலகில் வாழ்ந்து வந்தாள், அது வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் எடித்தையே எல்லையாகக் கொண்டிருந்தது.' "[21] நீங்களும் நானும் எடித்தைப் போல் இருக்கச் சாத்தியக் கூறு உள்ளதா? நாம் பிறரின் தேவைகளைக் குறித்து அக்கறையாய் இருக்கின் றோமா? அல்லது உதவிசெய்வதற்கான வாய்ப்புகளை நாம் வெறுத்து ஒதுக்குகின்றோமா? தேவனே, பிறரைப் பற்றி நினைக்கக் கற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு உதவும்!

## தவறு #3 - இவர் உலகப்பொருட்களைக் கொண்டு தமது ஆத்துமாவுக்குத் தேவையானவற்றை அளிக்க முடியும் என்று நினைத்தார்

மூன்றாவது, வெற்றிகரமான இந்த வியாபாரி, உலகப் பொருட்களைக் கொண்டு தமது ஆத்துமாவுக்குத் தேவையானவற்றை அளிக்க முடியும் என்று நினைத்தார். இவர், "ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு" என்று கூறினார்[22] (லூக். 12:19).

இம்மனிதரின் வார்த்தைகளில் உள்ள மதியீனம் தெளிவானதாக உள்ளது.[23] ஒரு மேஜையின் மேற்பரப்பைக் கற்பனை செய்து கொள்ளுங் கள். இடது புறத்தில் சுவைமிகுந்த உணவு உள்ளது. வலது புறத்தில்

*வேதாகமம் ஒன்றுள்ளது. ஒன்று உடலுக்கு உணவாக இருக்கையில் இன்னொன்று ஆத்துமாவுக்கு உணவாக உள்ளது. நாம் ஒன்றின் உணவைக் கொண்டு இன்னொன்றைப் போஷிக்க இயலாது. இயேசு, "அழிந்து போகிற உணவை" "நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற உணவுடன்" நேரெதிராக ஒப்பிட்டார் (யோவா. 6:27). அவர், "மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கூறினார் (மத். 4:4). உடலுக்குத் தேவையானவற்றை அளித்து, ஆவிக்குத் தேவையானவற்றை அளிக்காதிருத்தல் என்பது மதியீனத்தின் உச்சமாக உள்ளது.*

*செல்வந்தரான இந்த மனிதரை அகப்படுத்திய அதே வலையில் சிலவேளைகளில் நாம் விழுந்து விடுவதென்பது சாத்தியமாக இருக்கிறதா? நாம் எப்போதாவது, "எனக்கு மட்டும் _______ இருந்தால்,[24] நான் மகிழ்ச்சியாக இருப்பேன்" என்று நினைத்தது அல்லது கூறியதுண்டோ? அதிகம் அதிகமாகச் சேர்த்துக் குவிப்பதில் பலர் மன சமாதானத்தையும் பாதுகாப்பையும் எதிர் நோக்குகின்றார்கள், ஆனால் கர்த்தரோ, "ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று உரைத்தார் (லூக். 12:15). அதிகமாக இலாபம் ஈட்டுவதால் மகிழ்ச்சி வருவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, மகிழ்ச்சி என்பது நாம் ஏற்கனவே கொண்டுள்ளவற்றின்மீது நாம் கொண்டுள்ள நேர்மறையான எண்ணப் போக்கின் விளைவாக உள்ளது. பவுல் பின்வருமாறு எழுதினார்:*

> *போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம் (1 தீமோ. 6:6-8).*

*யாரோ ஒருவர், "உலகம் முழுவதும் மகிழ்ச்சியைத் தடம்பிடிக்கும் நிலையில் உள்ளது, ஆனால் பலர் தவறான வாசனையை மோப்பம் பிடித்துப் பின்செல்லுகின்றவர்களாய் இருக்கின்றனர்" என்று கூறியுள்ளார். என்றென்றும் நிலைத்திருக்கும் மகிழ்ச்சியானது பெறுவதில் அல்ல ஆனால் தருவதில்தான் வருகிறது. ஜான் பானிஸ்டர் அவர்கள், "வருமானம் என்பதல்ல ஆனால் செலவு என்பதே வாழ்வின் பிரதான விஷயமாக உள்ளது" என்று எழுதினார்.[25] இயேசு, "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று கூறினார் (அப். 20:35ஆ).*

*ஆத்துமாவானது பொருட்களால் ஒருக்காலும் திருப்திப்படுத்தப்பட இயலாது. உங்கள் ஆத்துமாவிற்குத் தேவையானவற்றை நீங்கள் அளிக்க விரும்பினால், நீங்கள் அதை உங்கள் தேவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ள உறவினாலும், பிறருடன் ஒரு அன்பான உறவினாலும் போஷிக்க வேண்டும்.*

## தவறு #4 - இவர் தாம் "வாழ்விற்கான குத்தகையைக்" கொண்டிருந்ததாக நினைத்தார்

*செல்வந்தரான இம்மனிதரின் பிற தவறுகளைப் பட்டியலிட முடியும், ஆனால் இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகின்றேன்: இவர் தாம் "வாழ்விற்கான குத்தகையைக்" கொண்டிருந்ததாக நினைத்தார், அதாவது தாம் இன்னும் வாழ்வதற்கும் செழிப்பதற்கும் பல ஆண்டுகள் தமக்கு உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்தது என்று நினைத்தார். இவர் தமக்கு "அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது" என்று நினைத்தார் (லூக். 12:19), ஆனால் தேவனோ, "மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துகொள்ளப்படும்" என்று இவரிடத்தில் கூறினார் (வ. 20).*

*சிலர், தாங்கள் "இந்த உலகத்தில் எல்லாவற்றிற்கும் நேரம் கொண்டிருப்பதாக" நினைக்கின்றனர் - கிறிஸ்தவர்கள் ஆவதற்கு நேரம், கர்த்தருக்காக வாழ்தலைப் பற்றித் தீவிரமாயிருக்க நேரம், தாங்கள் எப்படிப்பட்ட ஆண்களாக அல்லது பெண்களாக இருக்க வேண்டும் என்று அறிந்துள்ளார்களோ, அப்படிப்பட்டவர்களாக இருப்பதற்கு நேரம். ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் என்னிடத்தில், "ஆம், நான் அதைச் செய்ய வேண்டும் என்று அறிந்துள்ளேன், மற்றும் என்றாவது ஒருநாள் நான் அதைச் செய்வேன்" என்று கூறியுள்ளனர். சாலொமோன், "நாளைய தினத்தைக் குறித்துப் பெருமை பாராட்டாதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே" என்று எச்சரித்தார் (நீதி. 27:1). எதிர்காலத்திற்காக தைரியமாக, நம்பிக்கையுடன் திட்டமிடுபவர்களுக்கு யாக்கோபு பின்வருமாறு எழுதினார்:*

> *மேலும், "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலம் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே." ஆதலால்: "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம்" என்று சொல்லவேண்டும் (யாக். 4:13-15).*

*வாழ்வானது சுருக்கமானதாகவும் நிச்சயமற்றதாகவும் உள்ளது. "ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்" என்று வேதாகமம் போதிக்கிறது (யோபு 14:1, 2). நாம் நாளைய தினத்தைச் சார்ந்திருக்க முடியாது, ஏனெனில் நாளைய தினம் என்பது வராமலேயே போய்விடலாம். செய்யப்பட வேண்டியது இன்றே செய்யப்பட வேண்டும்.*

*நாம் மரணத்தைப் பற்றி நினைப்பதைத் தவிர்க்கின்றோம், ஆனால் அது*

*எதிர்பாராத வேளையில் வரக்கூடும், அடிக்கடி அவ்வாறே வருகிறது. செல்வந்தரான இம்மனிதர் ஒருவேளை வாழ்வின் உச்சகட்டத்தில் இருந்து கொண்டு, தாம் வாழ்வதற்குப் பல ஆண்டுகள் இருந்ததாக நினைத்திருக்க லாம். அதற்கு நேர்மாறாக, அவர் இருபத்து நான்கு மணி நேரம் கூடப்பெற்றிருக்கவில்லை: "உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துகொள்ளப்படும்." செய்தித்தாள்களின் தலைப்பு வரிகளிலிருந்து "திடீர் மரணம்" அலறுகிறது![26] எவரொருவரும் மரணத்தி லிருந்து பாதுகாப்பைப் பெற்றிருப்பதில்லை; அதைத் தடுக்க எந்த ஒரு நோய்த் தடுப்பு மருந்தையும் எடுத்துக்கொள்ள இயலாது (எபி. 9:27). நான் வாசித்த ஒரு மனிதர் தமது மரணத்தைப் பற்றி மிகவும் எச்சரிக்கையாய் இருந்தார்.[27] அவர் தமது உடலிலுள்ள கொழுப்பின் அளவைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் சரியான உணவுகளை உண்டார். அவர் உடற் பயிற்சியை மேற்கொண்டார். அவர் மருத்துவரின் அலுவலகத்திற்கு முறையாகச் சென்று உடற்பரிசோதனையைச் செய்து கொண்டார். பின்பு அவர் ஒரு வாகனத்தினால் மோதப்பட்டு கொல்லப்பட்டார்! நம்மில் எவரும் நாளைய தினத்தை உத்தரவாதப்படுத்த இயலாது. நித்தியத்திற்குத் தயாராக இருத்தல் என்பது எப்போதுமே முக்கியமானதாக உள்ளது.*

*கர்த்தர் உங்களிடத்தில் இப்போதே வந்து, "உன் ஆத்துமா உன்னிடத் திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" என்று கூறினால் எப்படியிருக்கும்? உங்கள் ஆத்துமா தயாராக இருக்குமா? யாரோ ஒருவர் "நவீன உலகில் ஆத்துமா என்பது தீங்கற்றதாக ஆகிவிட்டது, ஆயினும் மதிப்பற்ற இணைப்பாக - ஒருவரின் குடல்வால்[28] போன்றதாக - ஆகிவிட்டது" என்று கூறியுள்ளார். இருப்பினும் வேதாகமமானது, ஆத்துமா என்பது மனிதனின் விலைமதிப்பற்ற உடைமையாக உள்ளது - அதாவது, உண்மையில் அதுவே அவன் யார் என்பதன் சாராம்சமாக உள்ளது - என்று போதிக்கிறது. ஆத்துமா இழக்கப்பட்டுப் போனால் எல்லாம் இழக்கப்பட்டு விட்டது. இயேசுவின் கேள்வியை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: "மனு ஷன் உலகம்முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?" (மத். 16:26அ). "அதில் அவனுக்கு இலாபம் ஒன்றும் இல்லை!" என்பது புரிந்துகொள்ளப் பட்ட பதிலாக உள்ளது. "உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும்" என்ற பயபக்தியுள்ள வார்த்தை களுக்கு நாம் ஒவ்வொருவரும் தயாராக இருக்க வேண்டும்.*

## *முடிவுரை*

*செல்வந்தரான மனிதரின் சவ அடக்கத்தை நடத்திய பிரசங்கியார், இம்மனிதரைப் பற்றிய நல்ல விஷயங்களைக் கூறுவதற்குச் சிரமப் பட்டிருக்க மாட்டார் என்று நான் முன்னமே குறிப்பிட்டிருந்தேன். இவரை அடக்கம் செய்தவர்களும், "இங்கு நமது முன்னோடிக் குடிமகன்களில் ஒருவர் துயிலுகின்றார்" என்பது போன்ற பாராட்டும் நினைவு வாசகக் கல் ஒன்றைக் கண்டறிவதில் எவ்வித சிரமமும் அடைந்திருக்க மாட்டார்கள்.*

*இருப்பினும், "இங்கு ஒரு மதிகேடன் துயிலுகின்றான்" என்பதே உண்மையில் இவருக்குக் கர்த்தரின் நினைவு வாசகக் கல்லாக இருந்தது. அந்த வெற்றிகரமான வியாபாரியால் செய்யப்பட்ட தவறுகளை நாம் செய்யாமலிருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக:*

- *மதிப்பீடுகள் பற்றிய நமது கருத்துணர்வின்படி நாம் செயல்பட வேண்டும்.*
- *சுயநலத்திற்கு எதிராக நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.*
- *உலகப் பொருட்களைக் கொண்டு ஆத்துமாவுக்குத் தேவையானவற்றை நாம் அளிக்க முடியும் என்று நாம் ஒருக்காலும் நினைக்கக் கூடாது.*
- *"வாழ்விற்கான குத்தகை" எதையும் நாம் கொண்டிருப்பதில்லை என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.*

*நாம் இந்தப் பிரசங்கத்தை முடிக்கையில், அந்தக் கடைசியான கருத்தொன்றை ஆழ்ந்து சிந்திக்க என்னை அனுமதியுங்கள். நமக்கு வாழ்வில் இன்னும் ஒரு நாள் என்பது உத்தரவாதப் படுத்தப்பட்டிருப்பதில்லை. இந்தப் பாடம் உங்கள் மனச்சாட்சியைக் கலக்கியிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. ஒருவேளை இது உங்கள் பாவத்தை உங்களுக்கு உணர்த்தியிருக்கலாம். அப்படியென்றால், வாழ்வு குறுகியது மற்றும் நிச்சயமற்றது என்று நீங்கள் உணர்ந்தறியும்படிக்கும், எனவே உங்களை நீங்கள் இன்றே தேவனுடைய கிருபையினிடத்தில் எறியும்படிக்கும் நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன்.*

*நம்மில் பெரும்பாலானவர்கள் நேர - உணர்வு கொண்டவர்களாக இருக்கின்றோம்.[29] "மணி என்ன?" என்பது பொதுவாகக் கேட்கக்கூடிய கேள்வியாக உள்ளது. எனது மணிக்கட்டில் உள்ள கடியாரம், உலகப் பிரகாரமாக மணி என்ன என்று எனக்குக் கூறுகிறது, எனது கையில் உள்ள வேதாகமம், ஆவிக்குரிய வகையில் நேரம் என்ன என்று எனக்குக் கூறுகிறது:[30] இது பாவிகள் இரட்சிக்கப்படுவதற்கான நேரமாக உள்ளது (மாற். 16:15, 16; அப். 2:38). இது விசுவாசத்தில் நிலைத்திராதவர்கள் மீண்டும் கட்டியெழுப்பப்படக்கூடிய நேரமாக உள்ளது (கலா. 6:1; அப். 8:22, 23; யாக். 5:16). "இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொரி. 6:2ஆ).*

---

*குறிப்புகள்*

*[1]இந்த எடுத்துரைப்பு பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் எனது ஆதாரமூலங்களை எழுதி வைத்துக்கொள்ளாது இருந்த வேளையில் மேம்படுத்தியிருந்த பிரசங்கக் குறிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. உரியவருக்கு உரிய மதிப்பை அளிக்கத் தவறியிருந்தால் என்னை மன்னிக்கும்படி வேண்டுகின்றேன். [2]அமெரிக்காவிலும் பிற இடங்களிலும், சில கடைகளில் நடைக்கு அடுத்துப் பலகணிகள் வைக்கப்பட்டிருக்கும். வர்த்தகப் பொருட்களின் மாதிரிகள் இந்தப்*

பலகணிகளில் காட்சிப் படுத்தப்பட்டிருக்கும். சிலவேளைகளில் இந்த மாதிரிகள் அப்போதைய விலை நிலவரத்தைக் குறிக்கும் சிறு அட்டைகள் இணைந்தவையாக இருக்கும். இந்த விவரிப்பின் இன்னொரு பதிப்பானது, யாரோ ஒருவர் இரவில் கடைக்குள் புகுந்து விலையைக் குறிக்கும் சிறு அட்டைகளை மாற்றி மாற்றி வைத்து விட்டார் என்று கூறுகிறது. [3]நாம் வாழ்கின்ற நாடு "செல்வந்தமான நாடு" அல்லது ''ஏழ்மையான நாடு'' என்று எவ்வகைப் படுத்தப்பட்டிருந்தாலும் இது உண்மையானதாகவே உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு நடைமுறைப்படக்கூடிய விவரிப்புக்களைக் கொடுங்கள். [4]இதைப் பற்றிய தனிப்பட்ட விவரிப்பு ஒன்றைக் கொடுங்கள். "Big Don" வில்லியம்ஸ் என்பவர் தமது உரையின்போது எத்தனை முறை காற்சட்டையைச் சரிசெய்து கொண்டார் என்பதைப் பற்றித் தம்மிடம் அறிக்கை செய்தவரைப் பற்றிக் கூறினார். ஆலன் பிரையன் அவர்கள் தமது உரையொன்றில் குறிப்பிட்ட ஒரு வார்த்தையை எத்தனை முறை தவறாக உச்சரித்தார் என்று எண்ணிய கேட்பாளரைப் பற்றிக் கூறினார். [5]"உங்களுக்கு" என்பது கிரேக்க மொழியில் [கூட] பன்மைச் சொல்லாக[வே] உள்ளது. இது "உனக்கும் உன் சகோதரனுக்கும்" என்று குறிக்கலாம். அந்த சகோதரனும் அங்கு இருந்திருக்கச் சாத்தியம் உள்ளது. [6]இயேசு எல்லா அதிகாரமும் கொண்டுள்ளார் (மத். 28:18) மற்றும் ஒரு நாளில் அவர் நமது நியாயாதிபதியாக இருப்பார் (அப். 17:31). இருப்பினும் அவர், மற்றவர்களால் கையாளப்படக் கூடியவையான சிறு சிறு வழக்குகளைத் தீர்ப்பதற்காக இந்த பூமிக்கு வரவில்லை. இந்த வழக்குகளைத் தீர்த்து வைக்கும்படி இயேசுவிடம் கேட்டல் என்பது, அதிக கட்டணம் வசூலிக்கும் பல் மருத்துவர் , பொருட்களைப் பிடுங்கி எடுப்பதில் நிபுணர் என்பதற்காக ஒருவர் அவரிடத்தில் சென்று, பலகையொன்றில் உள்ள ஆணியைப் பிடுங்கி எடுக்கும்படி கேட்டுக் கொள்வதைப் போல் இருக்கும். [7]அவரது களஞ்சியங்கள் என்பவை நீங்களும் நானும் களஞ்சியம் என்ற வகையில் நினைப்பதில் இருந்து மாறுபட்டு இருக்கலாம். அந்த நாட்டில் தானியங்கள் பெரும்பாலும் தரைக்கு அடியில் உள்ள குழிகள் அல்லது தொட்டிகளில் சேர்த்து வைக்கப்பட்டன என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்த விவரம் இந்த உவமையை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. உலகில் நீங்கள் வாழும் பகுதியில், "களஞ்சியம்" என்னப்படும் எதைப் பற்றியும் நினைத்துப் பார்க்கலாம். [8]''நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?'' என்ற கேள்வியைப் பற்றி, யோபு 27:16, 17; சங். 39:6; 49:10; பிர. 2:18, 19, 21 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். தங்கள் தந்தை பின்வைத்துப் போனது குறித்துச் சச்சரவிட்ட அந்த இரண்டு சகோதரர்களை இயேசு மனதில் கொண்டிருந்து இருக்கலாம். [9]"தேவனிடத்தில் ஐசுவரியம் உள்ளவர்களாய்" இருத்தல் என்பது "நாம் கொண்டுள்ள யாவையும் தேவனிடத்தில் இருந்து வருகின்றன என்பதை நன்றியுடன் ஒப்புக்கொண்டு, அவர் நமக்குக் கொடுத்துள்ளவற்றைப் பிறரின் நன்மைக்காகவும் தேவனை மகிமைப்படுத்துவதற்காகவும் பயன்படுத்த முயற்சி செய்தல்" என்று அர்த்தப்படுகிறது (Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 [Wheaton, Ill.: Victor Books, 1989], 221). J. B. Phillips' translation has "is not rich where God is concerned" (*The New Testament in Modern English,* 151). [10]George W. Bailey, "The Rich Can Be Fools and Fools Can Be Rich," *The Preacher's Periodical* (July, 1982): 26. (Emphasis his.)

[11]அமெரிக்காவில், பணமானது உண்மையில் முக்கியமானவற்றை நமக்கு நிலையாகச் சுட்டிக்காண்பிக்கிறது என்று நீங்கள் குறிப்பிட முடியும். அமெரிக்கா வின் ஒவ்வொரு டாலர் நாணயம் அல்லது நோட்டுகளில் "In God We Trust" என்று அச்சிடப்பட்டுள்ளது. [12]"காணக்கூடியதான" ஒரு நாணயத்தையோ அல்லது ரூபாய் நோட்டையோ கையில் பிடித்துக் காண்பியுங்கள். [13]மீண்டும் இவ்விடத்தில் பணத்தை காட்சி உதவியாகப் பயன்படுத்த முடியும். [14]நீங்கள் ஒரு நாணயத்தையோ

*அல்லது ரூபாய் நோட்டையோ பொருளறி பாடமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தால், அதைப் பார்வையில் இருந்து மறைவாக்குங்கள். (நாணயத்தை "மறையச்" செய்வதற்கு நான் ஒரு எளிய தந்திரத்தைப் பயன்படுத்துவதுண்டு.)* [15]*நான் வளர்ந்த இடத்தில், பின்வரும் மரபுக்கூற்றொன்றை நாங்கள் கூறுவதுண்டு: "பிணம் சுற்றும் துணியில் பணப்பை எதுவும் இருப்பதில்லை." ஆனால் (அமெரிக்காவில்) இப்பொழுது பிணத்தைச் சுற்றுவதற்குத் துணி எதுவும் பயன்படுத்தப்படுவது இல்லை, ஆனாலும் இந்தக் கொள்கை இன்னமும் உண்மையானதாகவே உள்ளது.* [16]*அறிவியல் நோக்கங்களுக்காகச் செய்யப்படும் கண்ணாடிகளில் அலுமினியம் அல்லது வேறு உலோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன, ஆனால் வீட்டு உபயோகத் திற்குச் செய்யப்படும் கண்ணாடிகள் இன்னமும் பின்புறம் வெள்ளிப் பூச்சுடன்தான் செய்யப்படுகின்றன.* [17]*இது ஒரு சுத்தமான கண்ணாடித்துண்டு மற்றும் ஒரு சிறிய [முகம்பார்க்கும்] கண்ணாடி ஆகியவற்றுடன் செயல்விளக்கப்படுத்தப்பட முடியும்.* [18]This sentence was adapted from Ambrose, a fourth-century bishop of Milan (quoted in Richard C. Trench, *Notes on the Parables of Our Lord* [Westwood, N.J.: Fleming H. Revell Co., 1953], 341). [19]*அமெரிக்காவில் தற்காலத் தலைமுறையினர் அநேகமாக* Heinz *ketchup என்ற உணவுப் பதார்த்தத்தைக் கொண்டு இவரது பெயரை அறிந்திருக்கலாம், ஆனால் திருவாளர் ஹெய்ன்ஸ் ஊறுகாய்களைக் கொண்டே தமது வியாபாரத்தைத் தொடங்கினார்.* [20]*எல்லா ஆசீர்வாதங்களும் கர்த்தரிடத்தில் இருந்தே வருகின்றன (உபா. 8:18; 1 நாளா. 29:14; யாக். 1:17), மற்றும் நாம் ஒருநாளில் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய உக்கிராணக்காரர்களாக இருக்கின்றோம் (லூக். 16:2; 1 கொரி. 4:2 ஆகிய வசனங்களைக் காணவும்).*

[21]William Barclay, *The Gospel of Luke*, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 164. [22]*செல்வந்தரான இம்மனிதர் தமது ஆத்துமாவுக்கு கொடுத்த அறிவுறுத்தல்களை ஒரு எழுத்தாளர் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:* [*''சாய்ந்துகொள், சாப்பிடு, மதுபானம் அருந்து மற்றும் பளபளப்பாயிரு''*]. [23]*உணவுடன் கூடிய ஒரு மேஜை மற்றும் வேதாகமம் ஆகியவற்றின் புகைப்படங்கள் அல்லது வரைபடங்களை நீங்கள் பயன்படுத்த முடியும். மேலும், ஹம்பர்கர்/பப்ஸ் என்ற சிற்றுண்டி வகையானது பிரபலமாக இருக்கும் இடங்களில், நீங்கள் ஹம்பர்கர்/பப்ஸ் ஒன்றின் படத்தை ஒரு கையிலும் வேதாகமத்தை மறுகையிலும் பிடித்து உயர்த்திக் காண்பிக்கலாம்.* [24]*இதை தனி வகைப்பட்டதாக்குங்கள்: ஒரு புதிய அல்லது உயர்வான வீட்டை, ஒரு மேன்மையான வேலையை, அல்லது நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருந்தி வரக்கூடிய எதையாவது குறிப்பிடுங்கள்.* [25]John Banister, "The Rich Fool," *Sermons of John Banister,* Great Preachers of Today series, vol. 8, ed. J. D. Thomas (Abilene, Tex.: Biblical Research Press, 1965), 116. [26]*நடப்பில் உள்ள செய்தித் தாள்கள் எதிர்பாராத வகையில் வந்த மரணங்கள் பற்றிய செய்தியைக் கொண்டிருக்கும்.* [27]*தொடர்ந்து வரும் வாக்கியங்கள், அமெரிக்காவில் மக்கள் தங்கள் உடல் நலனைக் கவனித்துக் கொள்ளும் மாதிரி வழிமுறைகளாக உள்ளன. இதை உங்கள் பகுதிக்கு ஏற்பத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [28]*குடல்வால் என்பது, சிறுகுடலும் பெருங்குடலும் இணையும் இடத்தில் உள்ள ஒரு சிறு உறுப்பாகும், இது "மனித உடலில் பணி எதையும் கொண்டிராத" உறுப்பு என்று நீண்ட காலமாகக் கருதப்பட்டு வருகிறது* (*Grolier's Multimedia Encyclopedia*, 1997 ed., s.v. "appendix"). [29]*இதை உலகில் நீங்கள் வாழும் பகுதிக்குத் தக்கவாறு தழுவியமைத்துக் கொள்ளுங்கள். உலகின் சில பகுதிகளில் உள்ளவர்கள் மற்ற பகுதிகளில் உள்ளவர்களைக் காட்டிலும் அதிகமாக நேர-உணர்வு கொண்டவர்களாக இருக்கின்றனர்.* [30]*நீங்கள் உங்கள் கடியாரத்தையும் பின்பு வேதாகமத்தையும் சுட்டிக்காண்பிக்க விரும்பலாம்.*